வாரம் - 17 ஊக்கப் பாடல் எண் - 17

# திருக்குறள்

அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன் ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.

இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.

- திருவள்ளுவர்

திருக்குறள் பாடி முடித்த பிறகு மாணவர்கள் விரும்புகிற இசையோடு பாடுகிற, உடல் அசைவுடன் பாடுகிற 6 / 8 வரிகள் உடைய பாடல்களை தேர்வு செய்து பாடவைத்து ஊக்குவிக்கவும்.

பிறகு மாணவர்களிடம் அன்பாகப்பேசி கடந்த ஏழு நாள்களில் என்ன செய்தீர்கள் என்று இயல்பாகப் பேசவைத்து அவர்களை உங்களோடு இணைக்கவும்.

பிறகு சென்ற வாரம் எழுதிய வீட்டுப் பாடங்களை கேட்டு வாங்கித் தொகுப்பில் வைக்கவும்.



# வினாச் சொற்கள் அறிமுகம்

| | | |
|---|---|---|
| WHAT | = | என்ன |
| WHY | = | ஏன் |
| WHERE | = | எங்கு |
| WHEN | = | எப்பொழுது |
| WHICH | = | எது |
| HOW | = | எப்படி |

மேலுள்ள சொற்களை மாணவர்கள் உணரச்செய்யவும்

வினாச் சொற்களைச் சிறிய தொடர்களை இணைத்துக் காட்டி உள்வாங்கச் செய்யவும்

என்ன தெரியும் ? ஏன் வந்தாய் ? எங்கு இருக்கிறாய் ?

# வினாப்பயிற்சியும் விடையளித்தலும்

## என்ன தெரியும் ?

எழுத , படிக்க , பாட எனக்குத் தெரியும் .

## ஏன் வந்தாய் ?

தமிழ்ப் பாடம் படிக்க வந்தேன் .

## எங்கு படிக்கிறாய் ?

தமிழ்ப் பள்ளியில் படிக்கிறேன் .

## எப்பொழுது சேர்ந்தாய் ?

இந்த ஆண்டு சேர்ந்தேன் .

## எப்படிப் படிக்கிறாய் ?

நான் நன்றாகப் படிக்கிறேன் . நன்றி . வணக்கம் .

சூழலுக்கு ஏற்ப வினாச் சொற்களை வீட்டிலும்
வகுப்பறையிலும் பயன்படுத்த ஊக்குவிக்கவும்

# வாரம் - 17 பாட அறிமுகம்







அழகாக எழுதவும் ஒலிக்கவும் பயிற்சி தரவும். எழுத்துகளை எங்கு தொடங்கி எங்கு முடிக்க வேண்டும் என்பதற்கும் பயிற்சி தரவும். எழுத்துகள் அழகாக இல்லை என்றால் நேர்கோடு வளைகோட்டுப் படங்களை எழுதுவதற்கு முன்பாகப் பயிற்சி தரவும்.

## வாரம் - 17

## மாணவர் செயற்பாடு எண் - 1

மாணவர் பெயர் ....................................... நிலை............ நாள்................

( கற்றுக்கொண்ட ஞ் ஞ எழுத்துகளை கீழே எழுதிப் பழகவும் )

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞ் | ஞ | ஞ் | ஞ | ஞ் | ஞ |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

வாரம் - 17 மாணவர் செயற்பாடு எண் - 2

மாணவர் பெயர் ...................................... நிலை............ நாள்................

( கற்றுக்கொண்ட ற் ற எழுத்துகளை கீழே எழுதிப் பழகவும் )

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ற் | ற | ற் | ற | ற் | ற |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

# வாரம் - 17

## மாணவர் செயற்பாடு எண் - 3

மாணவர் பெயர் ....................................... **நிலை**........... **நாள்**................

( மாணவர்களே வகுப்பறையில் எழுத்தை இணைத்துப் படிக்க ஊக்குவிக்கவும். இதனை வீட்டிற்குக் கொடுத்து, பயிற்சி செய்து , அடுத்த வாரம் வரும் பொழுது **இயல்பாகப் படிக்க** ஊக்குவிக்கவும். மாணவர்கள் இதனை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கக் கூடாது. )

### நினைவூட்டல் -

ற்ற வற பற மற கற தற

வஞ் வற் மற பறபற

ற்ற வற்ற கற்ற மற்ற நற்ற

மஞ்சள் பஞ்சம் கஞ்சன்

வஞ்சகன் நஞ்சகம்

கற்றவர் மற்றவர் பஞ்சமர்

மரங்கள் மஞ்சம் தஞ்சம்

சஞ்சலம் பஞ்சகம் பற்ற

**( மாணவர்களிடம் தமிழ்ச் செய்தித்தாளைக் கொடுத்து ஒவ்வொரு எழுத்தாக இணைத்துப் படிக்க ஊக்குவிக்கவும். . இணைத்துப் படித்ததும் அதற்கான பொருளை உணரப் பயிற்றுவிக்கவும் . தமிழ் ஆங்கில அகராதியை வைத்துக் கொண்டு தான் படிக்கும் சொற்களுக்கான பொருளை தான் அறிந்த மொழியில் உணரச் செய்து உள்வாங்கச் செய்தால் அச்சொற்கள் ஆழமாகப் பதியும். )**